# வடகிழக்கு பருவமழை சராசரியை விட 6.3% குறைய வாய்ப்பு !

**திருச்சி, செப். 27:** குறுவை, சம்பாவுக்கு தண்ணீர் தர கர்நாடகம் மறுத்து வரும் வேளையில், திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கு இந்தாண்டு வடகிழக்கு பருவமழையும் பாராமுகமாகும் சூழல் உள்ளது.

சராசரியை விட 6.3 விழுக்காடு குறைவாக பொழியும் வாய்ப்புள்ளதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின், வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இந்த மையமானது, ஆண்டுதோறும் விவசாயிகளுக்கு உதவும் வகையில் பருவமழைக்கான முன்னறிவிப்பை வெளியிடுவது வழக்கம். இதன்படி, 2023ஆம் ஆண்டுக்கான வடகிழக்கு பருவமழை தொடர்பான முன்னறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதில், திருச்சி மாவட்டத்துக்கான வடகிழக்கு பருவமழையானது சராசரியை விட 6.3 சதவிகிதம் குறையும் என குறிப்பிடப்பட்டிருப்பதே திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கு வருத்தம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

திருச்சி மாவட்டத்தில் காவிரிப் பாசனத்தை நம்பி பயிரிடப்பட்ட குறுவைக்கு தண்ணீரே கிடைக்கவில்லை. ஆழ்துளை கிணறுகளை நம்பி பயிரிட்ட குறுவை மட்டுமே தப்பித்தது. பாசன நீரை நம்பிய 500 ஏக்கருக்கும் மேலான குறுவை பாதிக்கப்பட்டது. மேலும், சம்பா சாகுபடியை தொடங்குவதற்கும் தயக்க நிலையே நீடித்து வருகிறது. இந்த சூழலில் வடகிழக்கு பருவமழையும் கைவிடும் என்பது கூடுதல் கவலையை அளித்துள்ளது.

இதுதொடர்பாக, சிறுகமணியில் உள்ள வேளாண் அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த திட்ட ஒருங்கிணைப்பாளர் பி. முரளி அர்த்தநாரி கூறியது:



திருச்சி மாவட்டத்தின் ஆண்டின் சராசரி மழை அளவு 742.1 மி.மீ.. இதில், வடகிழக்கு பருவமழையின் பங்கு 378 மி.மீ.. இந்த ஆண்டில் வடகிழக்கு பருவமழையானது திருச்சி மாவட்டத்துக்கு சராசரியை விட 6.3 விழுக்காடு குறைவாக பொழிய வாய்ப்புள்ளது. அதாவது, 354 மி.மீ. மழை மட்டுமே பெய்ய வாய்ப்புள்ளது. எனவே, விவசாயிகள் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தவறாமல் பின்பற்ற வேண்டியது அவசியம்.

வடகிழக்கு பருவமழை காலத்தில் குறுகிய மற்றும் நடுத்தர கால ரகங்களை பயன்படுத்த வேண்டும். பாசன வசதியை உறுதி செய்யாமல் நீண்ட கால ரகங்களை தேர்வு செய்ய வேண்டாம். விளைநிலங்களில் ஒவ்வொரு 6 மீ அல்லது 20 அடி இடைவெளியிலும் சிறிய குறுக்குவெட்டுத் திட்டுகள் அமைக்க வேண்டும். பயிர்ப் பருவத்தில் அதிக மழை பெய்தால் பண்ணைக்குளத்தில்வடிகட்டலாம். அறுவடை செய்யப்பட்ட நீரை இடைக்கால அல்லது இறுதி வறட்சியின்போது துணைப் பாசனத்திற்குப் பயன்படுத்தலாம். தென்மேற்கு பருவ மழையின் இறுதி காலத்தில் பொழியக்கூடிய மழையை பயன்படுத்தி வடகிழக்கு பருவமழை காலத்திற்கான விதைப்பு நடவடிக்கைகளை அக்டோபர் இரண்டாம் வாரத்துக்குள் மேற்கொள்ளலாம். அனைத்து மானாவாரி பயிர்களுக்கும் விதை கடினப்படுத்துதலுடன் முன்பருவகால விதைப்பு மேற்கொள்ள வேண்டியது அவசியம். கருப்பு மண் பகுதிகளுக்கு பரந்தப் படுக்கை விதைப்பு முறை உகந்ததாக அமையும். முகடுகளிலும், சால்களிலும், முகடுகளில் அடிப் பகுதியில் இருந்து உயரத்தில் விதைக்க வேண்டும். பயிரின் இடைக்கால அல்லது இறுதிக் கால வறட்சியைத் தடுக்க ஸ்பிரேயர்களை பயன்படுத்தலாம். மண்ணின் ஈரப்பதம் இழப்பைத் தடுக்க பயிர் எச்சங்களை தழைக்கூளமாகப் பயன்படுத்தலாம். நெல்லில் காய்ச்சலும் பாய்ச்சலும் முறையை பயன்படுத்தி பாசனம் செய்ய வேண்டும் பயிர்களின் வறட்சியைத் தாங்கும் தன்மையை அதிகரிக்க, இலைவழியில் தெளிப்பு முறையில் உரங்களை இடலாம். வறட்சியின் தாக்கத்தை தடுக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பயிர் வளர்ச்சி ஊக்கிகளை பயன்படுத்தலாம் என்றார் அவர்.

# இளைது ஆக முள்மரம் கொல்க!

தமிழகத்திலுள்ள பள்ளிகளில் கடந்த சில ஆண்டுகளாக நிகழும் விபரீத நிகழ்வுகள், கல்வியாளர்களின் மனதில் கவலையையும் வேதனையையும் ஏற்படுத்தி வருகின்றன. வருங்காலத் தலைமுறையை வடிவமைக்கும் நாற்றங்கால் பருவத்தில் இருக்கும் பள்ளி மாணவர்கள் வன்முறையில் ஈடுபடுவதும், தற்கொலைகளில் இறங்குவதும் எதிர்காலத்துக்கு ஏற்றம் அளிப்பவை அல்ல.

பள்ளி மாணவர்கள் பலரின் சிகை அலங்காரம் முகம் சுளிக்க வைப்பதாக இருக்கிறது. அரசுப் பள்ளிகளில் ஆடை விதிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு ஆசிரியர்கள் அறிவுரை கூறுவதே சிரமமாகி விட்டது.

2022 ஜூலை 13-இல் கள்ளக்குறிச்சி மாவட்டம், கனியாமூரில் தனியார் பள்ளி மாணவி ஒருவர் மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்ட சம்பவத்தை அடுத்து அப்பள்ளி சூறையாடப்பட்டது. அதையடுத்து, மாநிலம் முழுவதிலும் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும், 77 வழிகாட்டுதல்களுடன் வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை 2022 ஜூலை 25-இல் வெளியிட்டது.

அதன்படி பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு பல வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. அதையடுத்து மாணவ - மாணவியரின் ஆடை, அலங்காரக் கட்டுப்பாடுகள் தொடர்பாகவும் அரசு வழிகாட்டு நெறிமுறைகளையும் அறிவித்தது.

ஆனால், தற்போதைய அரசுப் பள்ளி மாணவர்களில் மேல்நிலை வகுப்புகளில் பயிலும் மாணவர்களில் பலர் அருவருப்பை ஏற்படுத்தும் வகையில் சிகையலங்காரத்துடன் பள்ளிக்கு வருவது வாடிக்கையாகி இருக்கிறது. இதற்கு 'புள்ளிங்கோ கட்டிங்' என்று சிறப்புப் பெயரும் சூட்டப்பட்டிருக்கிறது.

இதுபோன்ற நிகழ்வை புதுக்கோட்டை மாவட்டம், மச்சுவாடியில் ஆசிரியர்கள் கண்டித்தபோது, அதனால் மனமுடைந்த மாணவர் ஒருவர் கடந்த சனிக்கிழமை (செப். 23) தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். அதையடுத்து அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் பெரும்பாலோர் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பிற்பட்டவர்களாக இருக்கின்றனர். அவர்களது குடும்பச்சூழல், பெற்றோர் கண்டித்துத் திருத்தக்கூடிய வகையில் இருப்பதில்லை. தவிர, அரசுப் பள்ளிகளின் தேர்ச்சி விகிதத்தை உயர்த்திக் காட்டுவதற்காக தேர்வுத்தர மதிப்பீடுகள் குறைக்கப்பட்டுவிட்டதால், அவர்களின் கல்வித்தேடலும் குறைந்துவிட்டது.

இவையல்லாது, வளரிளம்பருவச் சிக்கல்கள், குடும்பங்களில் நிலவும் சமூகச் சிக்கல்கள், போதை மருந்துப் பயன்பாடு, மதுவின் ஆதிக்கம் ஆகியவையும் மாணவர்களைத் தடம்மாறச் செய்கின்றன. வீட்டில் பெற்றோராலும் பள்ளியில் ஆசிரியராலும் கண்டித்து வளர்க்கப்படாத மாணவன் ஒழுக்கமுள்ளவனாக வளர வாய்ப்பில்லை. தமிழகத்தின் சில பகுதிகளில் நிகழ்ந்துள்ள மோசமான நிகழ்வுகளை இங்கு நினைவுகூர்வது, நாம் எத்தகைய ஆபத்தை நோக்கிப் பயணிக்கிறோம் என்பதை வெளிப்படுத்தும்.

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலத்தில் மதுபோதையில் பள்ளிக்கு வந்து மாணவிகளை கேலி செய்த மாணவரைக் கண்டித்த தலைமை ஆசிரியர் தலையில் தாக்கப்பட்டார் (2022 நவ. 22). அதையடுத்து அந்த மாணவன் பள்ளியிலிருந்து நீக்கப்பட்டான்.

தருமபுரி மாவட்டம், அமானி மல்லாபுரத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியின் வகுப்பறை மேஜை, நாற்காலிகளை மாணவ – மாணவிகள் உடைத்து சேதப்படுத்திய அநாகரிக நிகழ்வு காரணமாக, ஐந்து மாணவர்கள் பள்ளியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டனர் (2023 மார்ச் 9).

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையிலுள்ள தனியார் பள்ளியில் ஏழு மாணவிகள் பள்ளியிலேயே மது அருந்தி பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டதற்காக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் (2023 செப். 3).

திருநெல்வேலி மாவட்டம், நான்குனேரியில் பட்டியலின மாணவர் ஒருவரையும் அவரது சகோதரியையும் பிற்பட்ட ஜாதி மாணவர்கள் சிலர் வீடு புகுந்து தாக்கி அரிவாளால் வெட்டியது பரபரப்புச் செய்தியானது (2023 ஆக. 9). இது மாணவர்களிடையே நிலவும் ஜாதி வேற்றுமைகளையும் ஆதிக்க உணர்வையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது. இதுகுறித்து ஆராய நீதிபதி சந்துரு தலைமையில் தனிநபர் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்வுகள் மாதிரிக்கு மட்டுமே. இவை போன்ற மோசமான நிகழ்வுகள் தமிழகப் பள்ளிகளில் தொடர்ந்து நிகழ்வது நிச்சயமாக, மாபெரும் சமூக நோயின் அறிகுறி. சமுதாயத்தின் கண்ணாடியே நமது குழந்தைகள். பள்ளிகளில் பயிலும் நமது குழந்தைகளின் இயல்பு சரியில்லை என்றால் நமது சமுதாயம் சரியில்லை என்றே பொருள்.

நமது குழந்தைகளைத் திருத்தி அமைக்க வேண்டிய ஆசிரியப் பெருமக்களின் கைகளைக் கட்டுவதாக பள்ளிக் கல்வித்துறையின் நடவடிக்கைகள் அமைந்துவிடக் கூடாது. மாணவர்களின் தற்கொலைக்காக, எந்த விசாரணையும் இன்றி உடனடியாக ஆசிரியர்கள் பணியிடை நீக்கம் செய்யப்படுவது, அவர்களது பணித்திறனையும், கற்பித்தல் ஆர்வத்தையும் வலுவிழக்கச் செய்துவிடும்.

அதேபோல எந்த ஒரு விஷயத்திற்கும் தற்கொலை தீர்வல்ல. நீட் தேர்வுக்கான எதிர்ப்பின்போது, சில மாணவர்களின் தற்கொலை பெருவாரியாக விவாதிக்கப்பட்டதும்கூட மாணவர்களின் மனதில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை.

இன்றைய மாணவர்களின் உளவியல் நெருக்கடியை எதிர்கொள்ள, அரசு, பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய நான்கு பிரிவினரும் இணைந்து செயல்பட வேண்டும். அதற்கான வழிமுறைகளை உருவாக்கும் தலையாய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

# பெண்மை வெல்கென்று கூத்திடுவோம்!



முனைவர் வைகைச்செல்வன்

மக்களவை, மாநில சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்கக்கூடிய மசோதாவுக்கு மக்களவை ஒப்புதல் அளித்தது. பின்னர் மாநிலங்களவையும் ஒப்புதல் அளித்துள்ளதால் அம்மசோதா நிறைவேறியது. இதனால் அரசியலில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கும். மகளிர் மசோதா கடந்து வந்த பாதையை நினைத்துப் பார்க்க வேண்டிய நேரம் இது.

**பெண்கள் தனித்துவம் பெற வேண்டும். அவர்களுக்குப் பின்னால் நின்று கொண்டு ஆண்கள் இயக்குவது அவர்களின் ஆளுமையை கேள்விக்குறியாக்கி விடும். உயர்பதவிகளில் இருக்கும் பெண்களின் குடும்பத் தலைவர்கள் ஆதிக்கம் செய்வதை விட வேண்டும்.**

கட்டுரையாளர்:
முன்னாள் அமைச்சர்.

# துப்பாக்கி சுடுதலில் பதக்கம் குவித்த இந்தியர்கள்

ஹாங்ஸூ, செப். 27: ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் 5–ஆவது நாளான புதன்கிழமை, துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு 2 தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலம் என 7 பதக்கங்கள் கிடைத்தன; இது தவிர செயிலிங்கிலும் 1 வெண்கலம் கிடைக்க, இந்தியாவின் பதக்க எண்ணிக்கை அதிரடியாக 22–ஆக அதிகரித்துள்ளது.



## சிஃப்ட் கௌர் சர்மாவுக்கு உலக சாதனையுடன் தங்கம்

50 மீ ரைஃபிள் 3 பொசிஷன் ஸில் மகளிர் தனிநபர் பிரிவில் சிஃப்ட் கௌர் சர்மா 469.6 புள்ளிகளுடன் உலக சாதனையுடன் தங்கம் வென்று அசத்தினார். அதிலேயே ஆஷி சோக்சி (451.9) வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றினார்.

25 மீ ரேப்பிட் பிஸ்டல் மகளிர் அணிகள் பிரிவில் ஈஷா சிங், மானு பாக்கர், ரிதம் சங்வான் கூட்டணி 1,759 புள்ளிகளுடன் தங்கப் பதக்கம் வென்று அசத்தியது.

50 மீ ரைஃபிள் 3 பொசிஷன்ஸ் மகளிர் அணிகள் பிரிவில் ஆஷி சோக்சி, மனினி கௌஷிக், சிஃப்ட் கௌர் சர்மா இணைந்து 1,764 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் பெற்றனர்.

25 மீட்டர் பிஸ்டல் மகளிர் தனிநபர் பிரிவில் ஈஷா சிங் 34 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

ஸ்கீட் ஆடவர் தனிநபர் பிரிவில் அனந்த் ஜீத் சிங் நருகா 58 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஸ்கீட் ஆடவர் அணிகள் பிரிவில் அங்கத் வீர் சிங் பாஜ்வா, குர்ஜோத் சிங் காங்குரா, அனந்த் ஜீத் சிங் நருகா ஆகியோர் கூட்டணி 355 புள்ளிகளுடன் 3–ஆம் இடம் பிடித்து வெண்கலப் பதக்கம் வென்றது.

## விஷ்ணு சரவணனுக்கு வெண்கலம்



ஆடவருக்கான டிஞ்ஜி ஐஎல்சிஏ–7 பிரிவில் இந்தியரும், தமிழருமான விஷ்ணு சரவணன் 11 பந்தயங்களின் முடிவில் 34 நெட் புள்ளிகளுடன் 3–ஆம் இடம் பிடித்து வெண்கலப் பதக்கம் பெற்றார். ஆசிய போட்டிகளில் செயிலிங் விளையாட்டின் இந்தப் பிரிவில் இந்தியாவுக்கு இதுவே முதல் பதக்கமாகும். இத்துடன் இந்தியா 1 வெள்ளி, 2 வெண்கலம் என 3 பதக்கங்களுடன் செயிலிங் விளையாட்டை நிறைவு செய்தது.

டேபிள் டென்னிஸ்: கலப்பு இரட்டையரில் முன்னேற்றம்

கலப்பு இரட்டையரில் சத்தியன்/மனிகா பத்ரா ஜோடி 3–1 என தாய்லாந்து கூட்டணியை வீழ்த்தியது. அதிலேயே ஹர்மீத் தேசாய்/ஸ்ரீஜா அகுலா கூட்டணி 3–0 என மக்காவ் ஜோடியை வென்றது. இதையடுத்து இரு இந்திய ஜோடிகளும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு வந்தன.

ஆடவர் இரட்டையர் ரவுண்ட் ஆஃப் 32–இல் மனுஷ் ஷா/மானவ் தக்கர் இணை 3–2 என தாய்லாந்து இணையை சாய்த்தனர்.

## 7 நூல்களுக்கு அருட்செல்வர் நா.மகாலிங்கம் மொழிபெயர்ப்பு விருதுகள்

**பொள்ளாச்சி, செப்.27:** அருட்செல்வர் நா. மகாலிங்கம் மொழிபெயர்ப்பு விருதுகள் 7 நூல்களுக்கு வழங்கப்படவுள்ளன.



அருட்செல்வர் நா. மகாலிங்கம் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களுக்கு அருட்செல்வர் நா. மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மையத்தின் சார்பில் ஒவ்வோர் ஆண்டும் 7 நூல்களுக்கு விருதுகள் வழங்கப்படும் என சக்தி குழுமத் தலைவர் ம.மாணிக்கம் தெரிவித்திருந்தார்.

அதன் தொடர்ச்சியாக 2023–ஆம் ஆண்டு மொழிபெயர்ப்பு விருது தேர்வுக்கான நடுவர் குழுக் கூட்டம் அருட்செல்வர் மொழிபெயர்ப்பு மைய அலுவலகத்தில் கடந்த 22–ஆம் தேதி நடைபெற்றது. இதில் நடுவர்களாக எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன், பேராசிரியர் பழனி. கிருஷ்ணசாமி, மொழிபெயர்ப்பாளர் சா. தேவதாஸ் ஆகியோர் பங்கேற்றனர். நடுவர்களின் ஒருமித்த தேர்வாக பின்வரும் நூல்கள் பரிசுக்குத் தேர்வு செய்யப்பட்டன.

முதல் பரிசு ரூ.2 லட்சத்துக்கு டேவிட் கிராஸ்மேன் எழுதிய ஆங்கில நாவலை 'நிலத்தின் விளிம்புக்கு' என்று தமிழில் மொழிபெயர்த்த அசதா தேர்வு செய்யப்பட்டுள்ளார். இரண்டாம் பரிசாக இரண்டு நூல்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் வழங்கப்படுகிறது. இதற்கு மமாங்தய் எழுதிய ஆங்கில நாவலை 'கருங்குன்றம்' என்று தமிழில் மொழிபெயர்த்த கண்ணையன் தட்சிணாமூர்த்தியும், கே. சதாசிவன் எழுதிய ஆங்கில வரலாற்று ஆய்வு நூலை 'தமிழகத்தில் தேவதாசிகள்' என்ற பெயரில் மொழிபெயர்த்த கமலாலயனும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மூன்றாம் பரிசாக நான்கு நூல்களுக்கு ரூ.25 ஆயிரம் வழங்கப்படுகிறது. பி. அஜய் பிரசாத் எழுதிய தெலுங்கு கதைகள் என்ற நூலை 'அத்தங்கி மலை' என்ற பெயரில் மொழிபெயர்த்த க. மாரியப்பன், கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ் எழுதிய வரலாற்று நூலை 'எனது ராணுவ நினைவலைகள் 1– 2' என்ற பெயரில் மொழிபெயர்த்த ப. கிருஷ்ணன், கொரியக் கவிதைகளை 'மலர்கள் விட்டுச் சென்ற வெற்றிடத்தில்' என்ற பெயரில் மொழிபெயர்த்த பா. ரவிக்குமார், ப.கல்பனா ஆகியோருக்கும், மலையாளக் கவிதைகளை, கேரள பழங்குடி கவிதைகள் என்ற பெயரில் மொழிபெயர்த்த நிர்மால்யா ஆகியோருக்கும் இந்தப் பரிசு வழங்கப்படவுள்ளது.

இவ்விருதுகள் அருட்செல்வரின் நினைவு நாளான அக்டோபர் 2–ஆம் நாள் சென்னை ஏ.வி.எம். ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெறும் வள்ளலார் காந்தி விழாவில் வழங்கப்படும் என்று மொழிபெயர்ப்பு மைய இயக்குநர் சிற்பி பாலசுப்பிரமணியம், என்ஜிஎம் கல்வி நிறுவனங்களின் செயலர் சி. ராமசாமி ஆகியோர் தெரிவித்தனர்.